Establishment of Steel Plant at Salem

*36 Q.—THIRU A. BALASUBRAMANYAN :
THIRU S. RAMACHANDRAN :
THIRU K. R. NALLASIVAM :
THIRU A. M. RAJA :
THIRU L. BALARAMAN : } Will the Hon. the Minister for Education and Industries be pleased to state with reference to the answer given to Question No. 3 on 29th March 1967—

(a) whether the Government have taken up the proposal for the early establishment of a Steel Plant in Salem with the Central Government; and

(b) if so, the results thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்தத் திட்டம் இந்தியப் பேரரசின் ஆலோசனையில் உள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தீர்மானிக்கப்பட்டதும் இதன் பேரில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. க. ரா. நல்லசிவம் : இந்தத் திட்டமானது நீண்ட நெடுங் காலமாக உத்தேசத்திலேயே இருக்கிறது. இந்தத் திட்டத்தை உத்திரவாதப்படுத்திப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு கால கெடு வைத்துப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, முன்பே, இந்தச் சட்டமன்றத்திலே இந்தப் பிரச்னை பலமுறை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே இதைப்பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது எப்படியும் எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்திய அரசினரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற நிலையிலேதான் இந்த அரசு இப்பொழுது வற்புறுத்திக் கொண்டு வருகிறது. இதைப்பற்றிய அனுமதியை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது இன்னும் வரப்பெறாத நிலைமையில் இனி என்ன செய்வது என்பதைப்பற்றிய பரிசிலனை எல்லாக் கட்சித் தலைவர்கள், தொழில் விற்பன்னர்கள் இவர்களைக் கொண்ட குழுவொன்று நியமித்து அதிலே ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்படலாம் என்கின்ற யோசனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே நிதிநிலை அறிக்கையிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the public as well as the Members of the Legislature can acquire a scrappy knowledge of the Steel project by way of questions and answers in this house or whatever appears in the newspapers and whereas it is so important for the industrial development of our country to establish a Steel plant, will the Government be pleased to give us some kind of brochure with all the details like the feasibility or desirability of the plant, the

iron-content of the ore and why it is absolutely necessary that the entire public opinion should be behind the Government. It is not exactly the Party in power that has got to fight out the issue but also the entire public should join with the Government on this issue. So, will the Government consider the possibility of issuing a brochure on the subject?

THE HON. THIRU C. N. ANNADURAI: I am very glad that the hon. Member is one with the Government in desiring the Salem Steel Plant. I would favourably consider his suggestion but there is one snag. Already much literature has been produced on the subject and the former Ministers have given copious statement about that. If the present Ministry also should have to give another brochure, there is no difficulty in that but instead of that, I would place before the hon. Member this suggestion, viz., that leaders of all Parties should sit together and discuss this problem and educate the public about it.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையைத் தமிழக அரசே நடத்துவதற்கு ஏன் முன்வர வில்லையென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இதை ஏன் தமிழக அரசு நடத்த முன்வரவில்லை என்பது 10 ஆண்டுகளாகக் கேட்கப் பட்ட கேள்வி. அதே கேள்வி இப்பொழுது திருப்பிக் கேட்கப் படுகிறது. தமிழக அரசே ஏன் நடத்தவில்லை என்பதற்கு முதற் காரணம், மத்திய அரசே இதை நடத்துவதாகச் சொன்னது. மத்திய அரசு அது சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையில்தான் தமிழக அரசு அதைத் தானே நடத்த வேண்டு மென்று யோசிக்கவில்லை. இன்னும் மத்திய அரசு இதைத் தானே நடத்த முடியாது என்று திட்டவட்டமாக அறிவிக்க இல்லை. அப்படி மத்திய அரசு நடத்தவில்லை யென்று அறிவிக்குமானால், மத்திய அரசு தென்னக மக்களுக்குத் தீங்கிழைத்துவிட்டது என்பதைப் பொதுமக்களுக்கு அறிவித்துவிட்டு, இன்றைய தினம் இருக்கின்ற தமிழக அரசு அந்தத் திட்டத்தை தானே மேற்கொள்வதற்குத் தயாராக இருக்கிறது.

DR. H. V. HANDE: In view of the indecision with regard to the Salem Steel Plant, will the Government examine the possibility of starting a Plant which costs much less, viz., either a pig iron plant or a pelletisation plant so that alternative proposals can be submitted to the Central Government?

THE HON. THIRU C. N. ANNADURAI: The hon. Member made the suggestion yesterday also. The suggestion is very interesting and I would pursue it. But anyhow if the Central Government say 'No' to the proposal and if it allows the State Government through their industrial licence, to have it on the State Sector itself, I think, with the Japanese collaboration, we can have a decently sizable steel plant.

1967 ஜூன் 20]

திரு. கே. பி. எஸ். மணி : கடந்த பதினைந்து ஆண்டுக்காலமாக இந்தச் சேலம் திட்டத்தை ஏலம் விட்டுக்கொண்டே இருக்கிறார்கள் மத்திய அரசினர். இந்தப் போக்கை எதிர்க்கின்ற முறையிலே மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும்படி பொது மக்களிடையே கோரிக்கை விடுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : என்னுடைய நிதி நிலை அறிக்கையில் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். கண்டனம், கிளர்ச்சி, பதவித் துறப்பு என்கின்ற அளவிலே செல்வதற்கு இந்த அரசு பொது மக்களுடைய கருத்தை அறியும்.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state whether the Government has fixed a time-limit for taking direct action like agitation and resignation from office in connection with this steel plant? 9-30

THE HON. THIRU C. N. ANNADURAI : I cannot evidently fit it with the anxiety of the Member.

திரு. எஸ். ஜே. ராமசாமி : நாம் எடுத்துக் கொள்ளக் கூடிய முயற்சி பின் தங்கக்கூடிய நிலைமையில் இல்லாமல் போராட வேண்டிய நிலைமையில் இருப்பதால் பதவித் துறப்பு என்ற நிலையில் பின் நோக்கிச் செல்வதைத் தவிர்த்துப் போராட வேண்டுமென்ற எண்ணத்தைக் கைக் கொள்ளுவார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் போராட வேண்டுமென்று சொன்னது பல பொதுப் பிரச்சினைகளுக்காகப் போராடிப் பழக்கப்பட்ட எனக்குப் புது உற்சாகத்தைத் தருகிறது.

திரு. க. ரா. நல்லசிவம் : மிக முக்கியமான இந்த விஷயத்தில் காலக் கெடு நீண்டு கொண்டு போகக் கூடிய காரணத்தால் மத்திய சர்க்காருக்கு அறிவிப்புக் கொடுத்து இந்தக் காலத்திற்குள் இதை முடிக்க வேண்டும், அதற்குள் முடிக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுப்போம் என்ற அளவில் முடிவு செய்வதற்கு இந்தச் சர்க்கார் தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின்படி நடப்பதாகத்தான் உத்தேசம். காலத்தைக் குறித்துக் கொள்வது இந்தச் சர்க்காருடைய சவுகரியங்களைப் பொறுத்தது.

திரு. வி. கே. கோதண்டராமன் : பத்து வருஷ காலமாகக் கேட்டாயிற்று. இன்னும் எதற்காகக் கேட்கவேண்டும்? அந்நிய நாட்டுச் செலாவணியை ஜப்பான் தரத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, உடனடியாக அவர்களுடன் ஒப்பந்தம் செய்து நிதி தேவைப்பட்டால் மக்களிடமிருந்து நிதி திரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு இந்தத் திட்டத்தை மேற்கொள்ள முன் வருவார்களா?

[1967 ஜூன் 20

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இந்தப் பிரச்சினையில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று—ஐந்தாண்டுத் திட்டங்களின்படி பெரிய கன ரகத் தொழில்களை இந்தியாவினுடைய சகல பகுதிகளிலும் ஒருசீராக அமைக்க வேண்டுமென்ற நீதியை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடக்கிறதா இல்லையா என்பதைப் பொதுமக்களுக்கு அறிவிப்பது ஓர் அம்சம். இரண்டாவது—அவர்களாலே முடியாது என்று தெரிந்த பிறகு நாமே எடுத்து நடத்துவது என்பது மற்றொரு அம்சம். இந்த இரண்டு அம்சங்களில் மத்திய சர்க்கார் நம்முடைய மாநிலத்திற்கு இந்தத் திட்டத்தைச் சரியான முறையில் தரப் போகிறார்களா இல்லையா என்பதைத் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை. திட்டவட்டமாக அறிவித்த பிறகு எப்படி அது 'எகனமிக் இம்பாலன்ஸ்', 'ரீஜினல் இம்பாலன்ஸ்'—மாநிலங்களுக்குள்ள தொழில் வளர்ச்சியில் சமநிலை என்ற தத்துவத்தை, கொள்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டு நடக்கத் தவறியிருக்கிறார்கள் என்பதைப் பொதுமக்கள் உணரும்படியாகச் செய்து அதற்குப் பிறகு மாநில சர்க்கார் ஏற்றுக் கொள்வதா என்பதைப் பற்றி முடிவு செய்யவேண்டும். இப்போது இவ்வளவு பெரிய திட்டத்தை மாநில சர்க்காரே எடுத்துக் கொள்வது தேவைதானா என்பதையும் மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளக் கூடும் என்ற நிலைமையில் 'நாங்களே ஏற்றுக் கொண்டு நடத்துகிறோம்' என்று சொல்வது மாநில சர்க்கார் நிதிநிலைமையை எண்ணிப் பார்க்கின்ற பொதுமக்கள் அந்த நிதியை வேறு பல காரியங்களுக்குச் செலவு செய்து வசதிகளைப் பெருக்கலாமே என்று எண்ணக்கூடும். ஆகவே, மத்திய சர்க்கார் இந்த விஷயத்தில் எவ்வளவோ நியாயம் இருந்தும் நியாயக் குறைவாக நடந்து கொண்டார்கள் என்பதைப் பொதுமக்கள் உணர்ந்த பிறகுதான் நாம் இதை மேற்கொள்வது தகுதியானதாக இருக்கும்.

திரு. ஆலடி அருணா: இனி புதிதாக அமைக்கப்பட இருக்கின்ற உருக்காலை ஆந்திரத்தில்தான் அமைக்கப்பட வேண்டும் என்று ஆந்திர அரசும், கர்நாடகத்தில்தான் அமைக்க வேண்டும் என்று கர்நாடக அரசும் கோரிக்கைகள் எழுப்பி வருகின்ற இந்தச் சமயத்தில் இரும்பு உருக்காலையைத் தமிழகத்தில்தான் ஆரம்பிக்க வேண்டுமென்று தமிழகத்தின் சார்பாக இந்த அரசாங்கம் கூறியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இதிலே கனம் உறுப்பினர் எழுப்பிய பிரச்சினைதான் மத்திய சர்க்காராலும் எடுத்துச் சொல்லப்பட்டது. சேலத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள், விசாகப்பட்டினத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஹாஸ்பெட்டில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள் என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதற்கு அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜர் அவர்கள் 'பொக்கோராவிலேயே அதிகப் பணத்தை ஒதுக்கிச் செலவழிப்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட அளவு பணத்தை அதற்கு ஒதுக்கிவிட்டு மிச்சம் இருக்கும் பணத்தைக் கொண்டு மூன்று

1967 ஜூன் 20]

இடத்திலும் இரும்புத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம்' என்ற யோசனையைக் கூறினார்கள். அவ்வளவு பெரியவருடைய யோசனையே புறக்கணிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதைப் பார்க்கும்போது நம்முடைய கனம் ஆலடி அருணா சொல்லுகின்ற யோசனையும், நான் சொல்லுகின்ற யோசனையும் அவ்வளவு பெரிய இடத்தில் எடுபடுமா என்பதைப்பற்றி ரொம்பத் தயக்கப்படுகிறேன்.

திரு. தோ. மு. நல்லசாமி : இந்தத் திட்டத்திற்கு ஜப்பானிய கொலாபரேஷன் மூலமாக எவ்வளவு தொகை கிடைக்க இருக்கிறது? அந்தத் தொகையும் மத்திய அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில், அல்லது முந்தைய மாநில அரசாங்கக் கோரிக்கையின் பேரில் நமக்குக் கிடைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஜப்பானிய உடன் உழைப்பு (கொலாபரேஷன்) என்பது மத்திய அரசாங்கத்தால் ஒத்துக் கொண்டு ஆரம்பித்திருப்பார்களேயானால் இந்நேரம் அத்திட்டம் செயலில் வந்திருக்கும். அவர்கள் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிற அளவைக் குத்து மதிப்பாகத்தான் சொல்ல முடியும். அந்நியச் செலாவணி எந்த அளவுக்குத் தேவையோ அதை ஜப்பானிய தொழில் அமைப்புக் குழு ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருக்கிறார்கள். அது கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய்க்கு வரும்.

திரு. ந. தருமலிங்கம் : சேலம் இரும்பாலை பற்றிய போராட்டம் தொடங்கும்போது காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அதிலே ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறதா? அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்ள அரசாங்கத்திற்கு எண்ணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : போராட்டம் நடத்தப்படுகிறபோது காங்கிரஸ்காரர்களும் போராட்டத்தில் இருப்பார்கள்—எதிர்த்தரப்பில். (சிரிப்பு)

சிதம்பரத்திலிருந்து அரியலூருக்கு இருப்புப் பாதை

37 வினா—. திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா---

(அ) சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்கோயில், மீஞ்சுருட்டி வழியாக அரியலூர் செல்ல புதிய இரயில் பாதை அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.